# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

## Annai Poopathi Tamil Cultural Centre

# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் செயற்பாடுகளும் திட்ட வரையறைகளும்

## தலைமை நிருவாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் நோர்வே பூராகவும் பரந்து விரிந்து பல கிளைகளைப் பரப்பி இன்று பெருவிருட்சமாக வியாபித்து நின்று தனது பணிகளை நிறைவாகவே செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் மேம்பாட்டிற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவை. ஆனால், நிறுவனத்தைச் சிறுமைப்படுத்தும் செயற்பாடுகள் சில வட்டாரங்களில் இருந்து முன்னெடுக்கப் படுகின்றன.

இம்முயற்சிகளை யார் எங்கிருந்து முன்னெடுத்தாலும், எழுந்தமானமான முடிவுகளுக்குள் உள்வாங்கப்படாமல், ஆழமாக அனைத்துப் பின்புலங்களையும் அறிந்த நிலையில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் அங்கத்தினர்கள் செயற்படவேண்டும். வேறு உள்நோக்கங்களுடன் இயங்குவோரால் தூண்டிவிடப்பட்டு, பின்புலங்களை ஆழமாக அறியாது செயற்பட முனைவது எம்மீது நாமே மண்வீசும் செயற்பாடு ஆகிவிடும் என்பதை அனைவரும் நினைவிற்கொள்ளவேண்டும்.

அதேவேளை, கலைக்கூடத்தின் கல்விச் செயற்பாடுகளிலோ அன்றேல் தாயகச் செயற்பாடுகளிலோ குறைபாடுகள் ஏதும் இருப்பதாக உணர்ந்தால் அவற்றைத் தக்கமுறையில் சுட்டிக்காட்டி எமது நிறுவனத்தின் வளர்ச்சியை ஆக்கபூர்வமாக ஆற்றுப்படுத்தும் உரிமையும் அங்கத்தினருக்கு உள்ளது.

நிருவாகம் சிறப்புற நடைபெறுவதற்கு அங்கத்தினர் தொடர்ந்து தமது ஆக்கபூர்வமான பங்கேற்பை யாப்பின் வழிப்பட்டு நின்று வழங்கவேண்டும். அதற்கேற்ற வழிமுறைகளை அங்கத்தினர் சரிவர அறிந்திருக்கவேண்டும். அதற்குத்

தேவையான சில அடிப்படைத் தரவுகளையும் கருத்துகளையும் இங்கே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் சார்பாக அதிகாரபூர்வமாக முன்வைக்கிறோம்.

இந்தப் புரிதல் இன்றி அல்லது வேறு உள்நோக்கங்களுடன் கடந்தகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்களின் போது நோர்வே நாட்டின் சட்டதிட்ட மற்றும் நிருவாக நடைமுறைகளைக் கண்காணிக்கும் அதிகாரபூர்வ தரப்புகள் தொடக்கம் நீதிமன்றுவரை அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட நிருவாக முறையின் நேர்த்தியான தன்மை உற்றுநோக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அனைவருக்கும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட நிருவாகம் உளநிறைவோடு இத் தருணத்தில் நினைவுபடுத்துகிறது.

## 1. பாரதூரமான பின்விளைவுகள் எவை என்பதைச் சரிவர விளங்கியிருத்தல்

நோர்வே நாட்டில் இயங்கும் எந்த ஓர் அமைப்பாக இருந்தாலும் அது நோர்வே அரசின் சட்டவிதிகளுக்கு உட்பட்டே செயற்பட முடியும். சட்டவிதிகளை மீறினால் நோர்வே நாட்டில் இயங்கும் தகைமையை அவ்வமைப்பு உடனடியாகவோ காலப்போக்கிலோ இழந்துவிடும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கான அமைப்பாக செயற்படுகின்றது. எமது கலைக்கூடமானது அரசின் பொது நிதியுதவிகளைப் பெறும் தகுதியை உழைத்துப் பெற்றுள்ள ஒரு நிறுவனமாகும்.

இந்த நிறுவனத்தின் யாப்பு நோர்வே நாட்டின் சிறுவர் இளையோர் அமைச்சின் நிறுவன நடைமுறைகளும் சட்டவிதிகளும் எனும் வழிகாட்டிக்கு ஒத்திசைவானதாக அமைந்திருக்க வேண்டும்.

இந்த நடைமுறையைப் பின்பற்ற மறுக்கும் அமைப்புக்கள் அரச அங்கீகாரத்துடன் வழங்கப்படும் பொது நிதியுதவியை இழக்கும். அவ்வாறு நிதியுதவி கிடைக்காது போனால், கலைக்கூடத்தின் அங்கத்துவப் பணம், தவணைக்கட்டணம் ஆகியவை அதிகரிக்கப்படும் நிலை உருவாகும்.

அரசிடம் இருந்து பெறப்படும் பொதுநிதிகள் யாவும் அங்கத்தினர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை.

பொது நிதியுதவியானது இரண்டு வகைப்படும். முதலாவது, அன்னை தலைமை நிருவாகச் செயற்பாட்டுக்கான நிதியுதவி. அடுத்தது, வளாகங்களின் செயற்பாட்டுக்கான நிதியுதவி.

வளாகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி வளாகங்களில் உள்ள அங்கத்தினர் அடிப்படையிலும், வளாகச் செயற்பாட்டின் அடிப்படையிலும் பிரித்தளிக்கப் படுகிறது.

இவ்வாறான நிதியுதவிகளைப் பெறுவதற்குரிய சட்டவிதிகள் மிகவும் நுணுக்கமாக அரச அமைச்சின் மேற்பார்வையில் தீட்டப்பட்டுள்ளன.

அதாவது, நோர்வேயில் உள்ள சிறுவர் இளையோர் அமைச்சு ஊடாக சிறுவர் இளையோருக்கான உதவி பெறும் நிறுவனங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அவை தமது விதிமுறைகளை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்ற விடயங்கள் மிகவும் கூர்மையாக நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

சிறார்கள் மற்றும் இளையோர்கள் தொடர்பாக எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படைப் பண்புகளையும் இந்தச் சட்ட விதிகள் மிக நுணுக்கமாக முன்வைத்துள்ளன.

ஆகவே, இந்தச் சட்டவிதிகளையும் ஒழுங்குமுறைகளையும் நாம் மிகவும் அவதானமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றை மீறுவதனால் நமக்கு நேரடியான பாரிய பிரச்சினைகள் உடனடியாக ஏற்படாது என்பது போல மேலோட்டமாகத் தோற்றமளிக்கலாம். ஆனால், உண்மை நிலைமை அப்படியானதல்ல.

யாப்பு மாற்றங்கள் உள்ளிட்ட பல விடயங்களை அவரவர் தாம் விரும்பிய எண்ணப் போக்கிலோ அல்லது ஒரு சிலரின் கட்டளைக்கு இணங்கவோ மாற்றுவதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக அமையும்;. இதனால், எதிர்வரும் ஆண்டுகளில் எமக்கு கிடைக்கவுள்ள பொதுநிதி குறைவடையக்கூடிய அல்லது நிறுத்தப்படக்கூடிய அபாயம் ஏற்படும்.

இது நமது நிறுவனத்தின் வளர்ச்சியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதோடு, அவ்வாறு நிதிவருமானம் தடைப்படுமாக இருந்தால் தொடர்ந்து எமது நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான மாற்று வழிகளை நாம் தேட வேண்டிய சூழலை உருவாக்கி, பெற்றோர்களிடமிருந்து பெறப்படும் அங்கத்துவக் கட்டணங்களை அதிகரிப்பதால் மட்டுமே நிறுவனத்தை நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையும் ஏற்படலாம்.

ஆதலால், தாம் தாம் விரும்புவது போல நினைத்த மாத்திரத்தில் எதையுமே செய்துவிட முடியும் என்ற எண்ணத்தோடும் அணுகுமுறையோடும் அன்னை பூபதி கலைக்கூட நிருவாக விடயங்களை அணுகுவது நோர்வே நாட்டு சட்டத்திற்கும் நடைமுறைகளுக்கும் ஈடு கொடுக்காது என்பதையும், எமக்கு நாமே அழிவுதேடும் வழிமுறையாகவே அது அமையும் என்பதையும் அனைவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

யாப்பு என்பது பெயரளவில் பதிவிலும் கடதாசியிலும் பேணப்பட்டால் போதும் என்றும் நடைமுறைச் செயற்பாட்டில் அதைப் பற்றிப் பெரிதாக அக்கறை கொள்ளத் தேவையில்லை என்று சிந்திப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். இந்தவிதமான

சிந்தனை சிறுவர் மற்றும் இளையோர் கல்வி தொடர்பானதும் பொதுநிதியோடு தொடர்புபடுவதுமான நிறுவனமான அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்துக்கு முற்றிலும் ஒவ்வாதது. இதைப் புரிந்துகொள்ளாத நிலையில் செயற்படுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்தப் புரிதலோடு, நிறுவன ரீதியான யாப்பு வழிமுறைகளையும் யாப்பை மாற்றுவதற்கான வழிமுறைகளையும், வளாகங்களுக்கு உள்ள உரிமை என்ன, நிருவாக உறுப்பினர்களும் அங்கத்தவர்களும் எவ்வாறான வழிகளில் நிறுவனத்தின் மேம்பாட்டை அணுகவேண்டும் என்பது தொடர்பான தரவுகளும் கருத்துகளும் இங்கே முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக எமது கட்டமைப்பில் யாப்பின் முக்கியத்துவம் என்ன என்பதை அனைவரும் புரிந்திருப்பது அவசியம். இங்கு குறிப்பிடப்படும் விடயங்களில் பொதுவான நடைமுறை விடயங்களும் அடங்குகின்றன.

நோர்வே நாட்டு அதிகாரபூர்வ மொழியில் உள்ள யாப்பே நிறுவன நடைமுறைகளின் வழிகாட்டியும் சட்டரீதியானதும் ஆகும்.

## 2. யாப்பின் வழிப்பட்டு நிறுவனம் இயங்கவேண்டும்

பொது நோக்கோடு சேர்ந்து இயங்கும் ஒரு கட்டமைப்பே நிறுவனமாக பரிணமிக்கிறது. தனது இலக்கு என்ன என்பதை ஒரு நிறுவனம் தெளிவாக யாப்பில் வரையறுத்திருக்க வேண்டும். தனக்கான இலக்கை அடைவதற்கான செயற் திட்டங்களை வகுத்து அதன்படி ஒழுக ஏற்பாடுகள் செய்தல் அவசியம். அவ்வகையில் நிறுவனத்தின் அடிநாதமாக விளங்குவது யாப்பாகும்.

யாப்பு ஒன்று முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படும் வரை அது வெறும் வரைவு மட்டுமே. விதிமுறைகளின் படி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே சட்டத்தின் படி அது செல்லுபடியாகும். அவ்வறான யாப்பு என்பது நிறுவனத்தின் சட்டநெறி. அதுவே நிறுவனத்தை இயக்கும் வழிகாட்டி. அவ் வழிகாட்டியே நிறுவனத்தின் உறுதியையும், நிறுவனம் தொடர்ந்து தனது இலக்கை நோக்கி பயணிப்பதைப் பாதுகாப்பதற்குமான மூலக் கருவியாகும்.

யாப்பின் உள்ளடக்கம் நிறுவனத்தின் நோக்கம், செயற்படும் முறை, அங்கத்தினரை இணைக்கும் வழிமுறைகள், அங்கத்தவர்களுக்கு இருக்கும் உரிமைகள் ஆகியவற்றோடு அங்கத்தவர்கள் பேணவேண்டிய பண்புகள் போன்றவற்றையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். அத்தோடு நிருவாகம் அமையும் முறை மற்றும் யாப்பில் மாற்றங்களை மேற்கொள்ளும் வழிமுறை போன்றவற்றையும் அவற்றை எவ்வாறு நிறைவேற்றுவது போன்ற விடயங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

நிறுவனத்தின் நடைமுறைகளையோ யாப்பையோ மாற்றுவதாயின் அதற்கான செயல்முறைகள் உண்டு. ஒரு தனிநபராலோ அல்லது ஒரு குழுவினாலோ தன்னிச்சையாக நிறுவனத்தில் மாற்றங்களைச் செய்ய முடியாது. அவ்வாறு மாற்றப்படின் அது நிறுவன யாப்புக்கு மட்டுமல்ல நாம் வாழும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கும் முரணானதாகக் கணிக்கப்படும் நிலை உருவாகும்.

நிறுவனத்தில் பணிபுரிவோரும் நிறுவனத்தில் அங்கத்தவராக இருப்பவர்களும் யாப்பு நடைமுறைகளை ஏற்றுக்கொண்டே நிறுவனத்தில் செயற்பட முடியும். யாப்பை ஏற்காதவர்கள் நிறுவனத்தோடு பயணிக்க இயலாது.

## 3. வளாகங்களும் தலைமை நிருவாகமும் இணைந்து முடிவெடுக்கும் வகையிலான கூட்டு நிறுவனம்

சிறுவர் மற்றும் இளையோர் அமைச்சின் வழிகாட்டி முறைக்கும் தமிழ்ச் சமூகத்தின் தேவைக்கும் ஏற்ப அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் நோர்வேயில் பதினேழு (17) வளாகங்களுடன் இயங்குகிறது. இது ஓர் இணைந்த கூட்டு நிறுவனமாகும். கீழிருந்து மேலாகவும், மேலிருந்து கீழாகவும் இயங்கும் வகையில் இது கட்டமைக்கப்பட்டுள்ளது. இணைந்து முடிவெடுத்தல் என்பதே இதன் பொருள். இது நிறுவனத்தின் யாப்பிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.



இன்று பதினேழு வளாகங்கள் இணைந்த செயற்பாட்டில் ஒரு நேர்கோட்டில் இயங்குகின்றன. யாப்பு விதிகளுக்கு அமைய அனைத்து வளாகங்களும் இணைந்து தேசிய ஆண்டுக் கூட்டத்தில் பங்கு கொள்கின்றன. தேசிய ஆண்டுக் கூட்டத்திலேயே நிறுவனத்திற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு, நிதி, அங்கத்துவம் ஆகிய முடிவுகளோடு, தேவையான யாப்பு மாற்றங்கள், நிருவாகத் தெரிவு மாற்றங்கள் என்பன தேசிய ஆண்டுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு சனநாயக ரீதியில் முடிவுகள் எட்டப்படுகின்றன. நோர்வே நாடுதழுவிய தேசிய மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளே அன்னைத் தலைமை நிருவாத்தையும், அனைத்து நடவடிக்கைகளையும் தீர்மானிக்கும் சக்தியாகும்.

தலைமை நிருவாகத் தெரிவானது தேசிய ஆண்டுக் கூட்டத்தில் வருடம் தோறும் நடைபெறுகிறது. இது எவ்வாறு நடைபெறவேண்டும் என்பது யாப்பின் விதிகளில் தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. நிருவாகத்தில் கடமைபுரிவோரில் பாதிப்பேருக்கான தெரிவு முதலாண்டுக் கூட்டத்திலும், எஞ்சிய பாதிப்பேருக்கான தெரிவு அடுத்த ஆண்டிலுமாக இடம்பெறும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது சிறுவர் மற்றும் இளையவர்களுக்கானது. ஆதலால் இந்நிறுவனத்தில் குறைந்தது ஐம்பது (50) விழுக்காடு இளையோர் நிறுவனத்தின் நிருவாகச் செயற்பாட்டில் இணைந்திருத்தல் அவசியம்.

## 4. பன்முகப்பட்ட நிருவாகக் கட்டமைப்பும் தலைமை நிருவாகத் தெரிவும் யாப்புரீதியாக உறுதிப்படுத்தப்பட்டவை

அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்தின் தலைமை நிருவாகத்தோடு கலை, கல்வி, நிதி, கணனி ஆகிய பிரிவுகளும் குழுக்களாக இயங்குகிறன. இவற்றோடு பாடநூல் குழுவினர், பட்டறை நடாத்தும் குழுவினர், தேர்வு சார்ந்த குழு என்பவற்றோடு அறிவு முற்றக் குழு, தேசிய மட்டத்திலான போட்டிகளை நடாத்தும் நோக்கோடு இயங்கும் அன்னைத் தமிழ் முற்றப் பணிக்குழு போன்ற குழுக்கள் அன்னைத் தலைமை நிருவாகத்தின் பணிப்புரைகளை ஏற்று எமது இளையோரின் வளர்ச்சியை நோக்கி ஒன்றித்துப் பயணிக்கின்றன.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் தலைமை நிருவாகத்தின் ஒத்திசைவோடு தனித்தனிக் குழுக்களாக இயங்கி வருகின்றன.

இப்பணிகளை இணைக்கும் வகையில் அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்திற்கான இணைப்பாளரை நேரடியாகத் தெரிவு செய்யும் செயற்பாடு தேசிய




ஆண்டுக் கூட்டத்தில் இடம்பெறும். அத்தோடு உதவி இணைப்பாளரின் தெரிவும் தேசிய ஆண்டுக் கூட்டத்திலேயே இடம்பெறும்.

இத் தெரிவுகள் தேசிய ஆண்டுக் கூட்டத்தில் பதினேழு வளாகங்களின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்படுவன. தற்போது வழக்கில் இருக்கும் யாப்பு 2010 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் உள்ளது. மேம்படுத்தப்பட்ட யாப்பு ரீதியிலான பயணமானது 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக உறுதிப்படுத்தப்பட்டுவருகிறது.

நிறுவனத்தின் பாதுகாப்புக் கருதி, யாப்பின் தேவை இனம் காணப்பட்டு அதை நடைமுறைக்குக் கொண்டுவரும் வழிகள் ஆராயப்பட்டு மேம்படுத்தப்பட்ட யாப்புருவாக்கம் இடம்பெற்றது.

இந்த யாப்பின் படி நிறுவனத்தின் காப்பாளர்கள் அங்கத்தவர்களே. யாப்பு விதிகளுக்கு அமைய அங்கத்தினர் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, தொடர்ச்சியான அஞ்சலோட்டம் போன்று அடுத்தடுத்து வரும் அங்கத்தினர் தொடர்ந்து இந்நிறுவனத்தைச் சிதறாது பாதுகாப்பதோடு நிறுவனத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியும் உறுதி செய்யப்படுவதற்கு யாப்பின் வழியான செல்நெறி முதற்கண் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அந்த வகையில் யாப்பின் படி இயங்கும் போதே எமது இளையோரின் கல்வி, கலை, பண்பாடு, வரலாறு, அடையாளம் என்பவற்றுக்குக் காப்பாக அன்னைக் கட்டமைப்பு விளங்க முடியும்.

அங்கத்தவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் எண்ணவோட்டங்களுக்கு ஏற்பத் தான்தோன்றித்தனமாகச் செயற்பட யாப்பு விதிகள் இடம் கொடுக்காது என்பதை அங்கத்தவர்கள் புரிந்து கொண்டு, அதற்கேற்ப உரிய வழிமுறைகளில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். யாப்பில் அங்கத்தவர்கள் பண்பு விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் தேசிய ஆண்டுக் கூட்டத்தில் கவனத்தில் எடுக்கப்படும் முக்கியமான விடயங்கள்:**

01. **அன்னை பூபதி தலைமை நிருவாகம்**
02. **அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் செயற்பாடுகள்**
03. **செயற்பாடுகளின் மீளாய்வு**
04. **கணக்கறிக்கை**
05. **பாதீடு**
06. **பொறுப்பாளர் தெரிவு**
07. **உபபொறுப்பாளர் தெரிவு**
08. **வருடாந்த அங்கத்தவர் கட்டணத்தை நிர்ணயித்தல்**
09. **தெரிவுக் குழுவை நியமித்தல்**
10. **மேற்பார்வைக் குழுவைத் தெரிவு செய்தல்**

மேற்குறித்த விடயங்கள் எதுவும் தவறவிடப்படமால் நேர்த்தியாக மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

அத்தோடு அன்னையின் செயற்பாடுகள், வளாகங்களின் செயற்பாடுகள், கடந்த ஓராண்டு காலத்தில் நடைபெற்ற செயற்பாடுகள் பற்றிய மீளாய்வும் தேசிய ஆண்டுக் கூட்டத்தில் இடம்பெறும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது இளையவர்களுக்கான தமிழ் மொழிக்கல்வியை, கலையை இலக்காக் கொண்டு இயங்குவதால் இவை தொடர்பான செயற்பாடுகள் அனைத்திற்குமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அன்னையின் தலைமை நிருவாகத்தின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

கல்வி, கலை தொடர்பான பல விடயங்களுக்குரிய முடிவுகள் தேசிய ஆண்டுக் கூட்டத்திலேயே எட்டப்படுகின்றன. அவ்வகையில் எமது மாணவர்களின் கல்வி எவ்வாறு இருக்கிறது, கல்வி சார்ந்து செய்யப்பட வேண்டிய திட்டங்கள் எவை, கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் எவ்வாறிருக்கவேண்டும் என்பது போன்ற முக்கிய முடிவுகளும் தேசிய ஆண்டுக் கூட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு, வளாகங்கள் எதிர்நோக்கும் சவால்கள்




அல்லது வளாகங்களால் முன்மொழியப்படும் விடயங்கள், வளாகங்களினால் எடுத்து வரப்படும் கருத்துக்கள் போன்றவை ஆண்டுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவுகள் அங்கேயே எட்டப்படுகின்றன.

தேசிய ஆண்டுக் கூட்டத்திலேயே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்திற்கான முடிவுகள் அறுதியும் இறுதியுமாக எட்டப்படுகின்றன என்பது இங்கு நினைவிற் கொள்ளப்படவேண்டியது.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடங்கள் ஓர் இணைந்த கூட்டு நிறுவனமாகவும் செயற்படுகின்றன. அந்த வகையில் ஒரு வளாகமானது அங்கத்தவர்களை உள்ளடக்கி யாப்பு விதிகளுக்கு அமைய நிருவாக அலகுகளை ஏற்படுத்தி இயங்குகின்ற அடித்தளப் பொறிமுறையாக உள்ளது. இதை ஒவ்வொரு வளாகமும் கருத்தில் எடுத்துச் செயற்படுவது அவசியம்.

வளாக நிருவாகங்கள் தமக்கென ஒரு யாப்பை கொண்டிருக்கும், அந்த வகையில் கூட்டு நிறுவனமாகச் செயற்படவேண்டிய தன்மையைக் கருத்திற் கொண்டு தாய்க் கட்டமைப்பின் யாப்பின் அடிப்படையைப் பின்பற்றி அனைத்து வளாகங்களுக்கான யாப்புகளும் அமைந்திருக்கும்.

## 5. யாப்பு மாற்றத்துக்கு யாப்புரீதியான வழிமுறை

ஒரு வளாகத்தின் யாப்பில் அதன் அங்கத்தவர் எவரேனும் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பின் அவ் விருப்பை வளாகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு நேரடியாகவோ நிருவாகத்தின் மூலமாகவோ எடுத்து வரவேண்டும். ஆண்டுப்

பொதுக் கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக எழுத்து வடிவில் தாம் விரும்பிய மாற்றத்தை அதற்கேற்ற நியாயப்படுத்தலுடன் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். குறிப்பாக, தாம் விரும்பிய யாப்பு மாற்றத்திற்குரிய யாப்புவிதியின் பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிட்டு ஆண்டுக் கூட்டத்திற்கு குறித்த மாற்றத்துக்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். வளாக ஆண்டுக் கூட்டத்தில் அம்மாற்றம் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மை வாக்கோடு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டால், அடுத்தகட்டமாக அதை அன்னையின் தலைமை நிருவாகத்தின் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தேசிய ஆண்டுக் கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறித்த வளாகம் சமர்ப்பித்து மாற்றத்திற்கான விருப்பைக் கொண்டு செல்லலாம்.

அனைத்து வளாகங்களும் தலைமை நிருவாகமும் சந்திக்கும் தேசிய ஆண்டுக்கூட்டத்தில் குறித்த பிரேரணை விவாதிக்கப்பட்டு, அங்கும் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மை வாக்கோடு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே மாற்றப்பட்ட புதிய முடிவு யாப்புரீதியாக உரிய அனைத்து மட்டங்களிலும் நடைமுறைக்கு வரும்.

ஏனைய வளாகங்களோடும் தாய்க் கட்டமைப்போடும் தொடர்புபடுகின்ற விதிமுறைகளிலான மாற்றங்களுக்கான ஆலோசனைகள் தேசிய ஆண்டுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட முன்னர் குறித்த வளாகத்தில் ஆராயப்பட்டு அங்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கவேண்டும்.

இவ்வாறு தாய் யாப்பின் விதிமுறைகளையோ அல்லது ஏனைய வளாக விதிமுறைகளையோ மாற்றியமைக்கக்கூடிய விருப்புடனான மாற்றங்கள் தேசிய ஆண்டுக்கூட்டத்திற்குக் கொண்டு சென்று, விவாதிக்கப்பட்டு, பெரும்பான்மை வாக்களிப்பின் பின்னரே குறித்த வளாகத்திலும் நடைமுறைக்கு வர இயலும். இவை தவிர்ந்த சிறிய மாற்றங்கள் மட்டுமே வளாக மட்டத்திலான ஆண்டுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு அன்னை தலைமை நிருவாகத்தின் ஒப்புதல் பெறப்பட்டிருக்க வேண்டும்.

தேசிய ஆண்டுக் கூட்டத்துக்கு முன்னர் முறைப்படி சமர்க்கப்பட்ட பிரேரணை அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் ஏனைய வளாகங்களுக்கும் அனுப்பப்பட்டு விரிவாக ஆராய்வதற்கான போதிய கால அவகாசம் வழங்கப்படும். அவ்வாறு ஒரு வளாகம் விரும்பும் மாற்றங்களை ஏனைய வளாகங்களும் கருத்தில் கொண்டு சாதக பாதக விடயங்களைத் தீவிரமாக ஆராய்ந்து பிரேரணை தொடர்பான தமது கருத்துக்களையும் தமது முடிவுகளையும் தேசிய மட்டத்திலான ஆண்டுக் கூட்டத்திற்கு அனைத்து வளாகங்களும் எடுத்து வரும். தேசிய மட்டத்திலான ஆண்டுக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பொரும்பான்மையுடன் அவை நிறைவேற்றுப்படும்போது குறித்த மாற்றங்கள் நடைமுறைக்கு வரும்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல குறித்த தனி ஒரு வளாகத்துக்கு மட்டுமுரிய, ஏனைய வளாகங்களுக்கும் தாய்க் கட்டமைப்புக்கும் பொதுவானவையாக அமையாத விதிமுறைகளில் மாற்றங்களை வளாக மட்டத்திலேயே தலைமை நிருவாகத்துடன் தொடர்பாடி இலகுவான படிமுறைகள் ஊடாக மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

இதற்கு உதாரணமாக, ஒரு வளாகம் தமது நிருவாக உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ தேவையேற்படும் பட்சத்தில் நேரடியாக அன்னை தலைமை நிருவாகத்துடன் தொடர்பு கொண்டு தமக்குத் தேவையான யாப்பு மாற்றத்தை நிவர்த்திசெய்துகொள்வதற்கு வழிவகை உண்டு.

இவ்வாறு குறித்த ஒரு வளாகத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக தலைமை நிருவாகம் மேற்படி தேவையை ஆராய்ந்து அது பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில் குறித்த வளாகத்தின் மேம்பாடு கருதி யாப்பு மாற்றத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடிய விதந்துரைகளை முன் வைப்பதற்கும் இது ஏதுவாக அமையும். அதேவேளை, மேற்படி வேண்டுகோள் விதிகளுக்கு விலக்கானதாக அமைந்திருந்தால், முடிவுகளை எட்ட முடியாத பட்சத்தில் அன்னையின் தலைமை நிருவாகம் மேற்படி யாப்பு மாற்றம் தொடர்பான வேண்டுகோளை தேசிய ஆண்டுக் கூட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வழிவகைகளைத் தானே முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

ஒரு வளாகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட யாப்பு மாற்றத்தை ஆராய்ந்து அது பொருத்தமாக இருப்பின் அன்னை தலைமை நிருவாகத்தின் ஒப்புதலோடு யாப்பு மாற்றமானது இடம்பெறும், மாறாக அனுப்பி வைக்கப்பட்ட யாப்பு மாற்றத்தில் சிக்கலான தன்மைகள் இருப்பதாக அன்னையின் தலைமை நிருவாகம் கருதினால் குறித்த யாப்பு மாற்றமானது அன்னை தலைமை நிருவாகத்தால் நிராகரிக்கப் படலாம். இருப்பினும், குறித்த வளாகம் தலைமை நிருவாகத்தின் முடிவை ஏற்றுக்கொள்ள விரும்பாத நிலை காணப்பட்டால், அந்த வளாகம் தாம் நினைத்த யாப்புமாற்றத்தைத் தேசிய ஆண்டுக் கூட்டத்திற்கு எடுத்து வருவதற்கான முழு உரித்தும் அதற்கு உண்டு. அவ்வாறு எடுத்து வரப்படும் யாப்பு மாற்றமானது தேசிய ஆண்டுக் கூட்டத்தில் முறையாக விவாதிக்கப்பட்டு அறுதியும் இறுதியுமான முடிவு எட்டப்படும்.

தேசிய ஆண்டுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை மாற்றி அமைக்கும் வழிமுறைகள் எவையும் எவருக்கும் கிடையாது.

தேசிய ஆண்டுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை முறையாக விளங்கி அதன்படி நிருவாக அலகுகளை செழுமைப்படுத்துவதே நிறுவனத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு சிறந்ததாகும்.

யாப்பு மாற்றம் என்பது ஒரு நிறுவனத்தின் அடிப்படையில் மாற்றத்தை உருவாக்கும் பொறிமுறையாகும். அங்கத்தவர்களால் அல்லது வளாகங்களால் கொண்டுவரப்படும் யாப்பு தொடர்பான மாற்றங்கள் அந்தந்த வளாகங்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருந்தால் மட்டுமே அவற்றை மேற்கொண்டு நகர்த்த முடியும். குறிப்பிட்ட வளாகத்தில் நிருவாகத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பின் அந்த மாற்றம் தொடர்பாக எழுத்து வடிவில் அன்னை தலைமை நிருவாகத்திற்கு அனுப்பி வைக்க முடியும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் யாப்பு மாற்றம் தொடர்பாக தேசிய ஆண்டுக் கூட்டத்தில் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மாற்றம் உருவாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் மட்டுமே யாப்பு மாற்றம் இடம்பெற முடியும்.

## யாப்பின் அடிப்படையில் தேசிய மட்டத்திற்கான ஆண்டுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கான தகுதி கீழ்காணும் அடிப்படையில் உள்ளது :

நூறு அல்லது நூற்றுக்கு குறைந்த எண்ணிக்கையான அங்கத்தவர்களைக் கொண்ட வளாகமொன்றுக்கு ஒரு வாக்கு. அவ்வாறே இருநூறு அல்லது இருநூறுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ள வளாகத்துக்கு இரண்டு வாக்குகள். இவ்வாறு ஐநூறு என்ற அங்கத்துவ எண்ணிக்கை வரையில் விகிதாசாரத்தின்படி வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும். அறுநூறுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட வளாகங்கள் அனைத்துக்கும் வாக்குகள் ஆறு. அதற்கு மேல் அதிகரித்துச் செல்லாத வண்ணம் தற்போதைய வாக்குரிமை வகுக்கப்பட்டுள்ளது.

வளாகங்கள் அல்லது நிருவாகப் பணியாளர்கள் தாம் விரும்பிய யாப்பு மாற்றங்களை தமது வளாகங்களின் பரிசீலனைக்குக் கொண்டு வந்து அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றை அன்னை தலைமை நிருவாகத்திற்கு அனுப்பி வைக்கத் தேவையான வழிமுறை வழங்கப்பட்டுள்ளதாலும், தலைமை நிருவாகம் ஒத்துக்கொள்ளாத மாற்றங்களைக்கூட அலசி ஆராய்ந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றும் அறுதியும் இறுதியுமான உரிமை தேசிய ஆண்டுக் கூட்டத்துக்கு இருப்பதாலும் யாப்பு மாற்றத்திற்கான யாப்பு வழிமுறை தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாக அன்னை பூபதி கலைக்கூடம் யாப்புரீதியாகச் சிறப்பாக இயங்கிவருகிறது.

நோர்வே அரசின் சட்டவிதிகளில் மாற்றம், சிறுவர் இளையோர் அமைச்சின் நிறுவன நடைமுறை சட்டவிதிகளின் மாற்றம் ஆகியவை நேரடியான தாக்கத்தை யாப்பில் ஏற்படுத்தும். இந்த மாற்றங்கள் தலைமை நிருவாகத்தால் ஆராயப்பட்டு யாப்பில் இணைத்துக் கொள்ளப்படும். அவ்வாறு இணைக்காதுவிடின் பக்க

விளைவுகள் ஏற்படும். இவை பெரும்பாலும் நிதி சார்ந்தவைகளாக இருக்கும். சிறுவர் இளையோர் அமைச்சின் நிறுவன நடைமுறை சட்டவிதிகளில் மாற்றம் கொண்டுவரும் போது அம் மாற்றங்கள் நிறுவனங்களின் பார்வைக்காக அனுப்பிவைக்கப்பட்டு ஆலோசனையும் பெறப்படுகிறது.

எது எவ்வாறாயினும், யாப்பு மாற்றமானது யாப்பில் கூறப்பட்டுள்ள விதிமுறையின் கீழ் மாத்திரமே முன்னெடுக்கப்படவேண்டும். இதை மீறும் உரிமை யாப்புக்கு அப்பாற்பட்ட எந்த ஒரு பொறிமுறைக்கும் கிடையாது.

## 6. நிறுவனத்துக்கு ஏற்புடைய பண்பை நிருவாக உறுப்பினர்களும் அங்கத்தினரும் தெரிந்து கடைப்பிடிக்கவேண்டும்.

ஒரு வளாகம் தனது கடமைகள் சார்ந்து அது எவ்வாறான பண்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும், நிருவாகச் செயற்பாட்டை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும். அதேவேளை அன்னை தலைமை நிருவாகத்துடன் இணைந்த செயற்பாட்டை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் அனைத்தும் யாப்பு விதிமுறைகளில் மிகவும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.


அதேபோல, அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பானது அங்கத்தவர்கள் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் வரையறை செய்துள்ளது.

தேசிய ஆண்டுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை சனநாயக முறையில் ஏற்கும் முதன்மைப் பண்பை அனைவரும் கொண்டிருப்பது அவசியம். இதுவே ஒரு நிறுவனத்தை சரியாக கொண்டு நடத்துவதற்கான அடிப்படையாக இருக்கமுடியும். இதுவிடயத்தில் எவ்வித விட்டுக்கொடுப்பும் இல்லாத இறுக்கத்தை அன்னை கடைப்பிடிப்பதன் மூலமே பொருத்தமான நிருவாகப் பண்பாடு நிலைநிறுத்தப்படமுடியும்.

ஓர் இணைந்த கூட்டுநிறுவனமாகச் செயற்படும்போது எட்டப்படும் முடிவுகள் தனிநபர்கள் சிலரின் தனிப்பட்ட விருப்புக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ அமைந்தாலும் அம்முடிவுகளை ஏற்று நடக்கும் நிறுவனப் பண்பு தனிமனிதர்களிடம் இருக்கவேண்டும்.

இந்த நிறுவனப் பண்பு இல்லாதவர்கள் நிறுவன விதிமுறைகளை மீறும் போது நிருவாகத்தில் இருந்து தாமாக வெளியேறவேண்டியிருக்கும் அல்லாதுவிடில் விலக்கப்படவேண்டிய விரும்பத்தகாத கடினமான சூழ்நிலை உருவாகும். இது அவரவர் செயற்படும் விதத்தையும் பண்பையும் பொறுத்தது.

அங்கத்தினர் எனப்படுவோர் நிறுவனத்தின் யாப்பை ஏற்று, நிறுவனத்தின் நோக்கை ஏற்று அந்த நிறுவனத்தில் தம்மை அங்கத்தினர்களாக இணைத்துக்




கொள்பவர்கள். யாப்பு விதிகள் அனைத்தையும் ஆழமாக அவர்கள் அறிந்துவைத்திருக்காவிடினும், சிக்கல்கள், சவால்கள், பக்கசார்புத் தன்மைகள் தோன்றும் போது யாப்பு விதிகள் என்ன சொல்கின்றன என்பதை தவறாது அறிந்துகொண்டு அவற்றைப் புறக்கணிக்காத வகையில் அங்கத்தவர்கள் செயற்படவேண்டும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் மூன்று வயதில் இருந்து இருபத்தாறு வயது வரை அங்கத்தினர்களாக இருக்கலாம். அதிலும் மூன்று வயது முதல் பதினைந்து வயது வரை உள்ளவர்கள் அங்கத்தினராக இருப்பினும் அவர்களுக்காக பெற்றோர்கள் அவர்களின் பிரதிநிதிகளாக இருப்பர். குடும்பம் ஒன்றுக்கு ஒரு பிரதிநிதித்துவம் மட்டுமே உள்ளது.

பதினைந்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பெற்றோர்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. பதினைந்து வயதுக்கும் இருபத்தாறு வயதுக்கும் உட்பட்ட அங்கத்தினர் நேரடி அங்கத்துவத்தினைப் பெறுவதனால் இவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இளையவர் மன்றம் போன்ற தனியான சிறப்பான அலகுகளைப் பயன்படுத்த யாப்பு இடமளிக்கின்றது.

பதினைந்து தொடக்கம் பதினெட்டு வயதுவரையான வயது தனிமனித முடிவெடுக்கும் அதிகார எல்லையைக் கொண்டிருக்கவில்லை என்பதனால் இவ்

வயதினர் எவ்வாறு நிறுவனங்களில் கையாளப்பட வேண்டும் என்பதற்குத் தனியான விதிமுறைகளும் உள்ளன என்பது இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டியது.

ஏற்கனவே விளக்கப்பட்டது போன்று அங்கத்தவர்கள் எனும் தகுதி யாப்பை ஏற்றுக் கொள்பவர்களுக்கானது. அதுமட்டுமன்றி, அங்கத்தினர் கட்டணத்தையும் தவறாது அவர்கள் செலுத்தி இருக்க வேண்டும். தவிரவும், அன்னையால் வழங்கப்பட்டிருந்த ஏனைய கட்டணங்களையும் முறைப்படி செலுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு, அங்கத்துவப் பணம் உட்பட ஏனைய கட்டணங்களை முழுமையாக செலுத்தியவர்களே முழுமையான அங்கத்தினராகக் கருதப்படுவர்.

முழுமையான அங்கத்துவ கட்டணங்களைச் செலுத்திய மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே வாக்குரிமை வழங்கப்படுகிறது.

அத்தோடு, அங்கத்துவ நிலையில் உள்ளவர்கள் மட்டுமே வளாகங்களில் இடம்பெறும் சந்திப்புகளில் கலந்து கொள்வதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளவர்களாகக் கருதப்படுவர்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது ஆரம்ப காலம் முதல் அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகவே இயங்கி வந்திருக்கிறது. அங்கத்துவ நிலைமையை இழந்த பின்னர் பொதுவாக நோர்வே நாட்டில் உள்ள அங்கத்துவ நிறுவனங்களைப் போல் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்திலும் நிறுவன ரீதியான செயற்பாடுகளில் அங்கத்தவர்கள் அல்லாதோர் தமது செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வது இயல்பானது. அங்கத்துவ நிலையை இழந்த பின்னர் நிறுவன ரீதியான உரிமை காலாவதியாகிறது.

அன்னை பூபதி நிறுவனமானது மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலாகவும் செயற்படும் வடிவத்தை கொண்டது. சனநாயக வழியில் ஒரு வளாகம் என்பது அடிமட்டத்தில் இயங்கும் செயற்பாட்டு அலகாகும். தேசிய ஆண்டுக் கூட்டம் என்பது தேசியமட்டத்தில் இயங்கும் ஓர் உயர்மட்டத் தளமாகும்.

அடிமட்ட நிலைகளில் இயங்கும் அலகுகளில் இருந்து எடுக்கப்பட்டு வரும் முடிவுகள் யாப்பு ரீதியாக நிறைவேற்றப்படும் வரை நிறைவேற்று அதிகாரமற்ற ஆலோசனைகளாக மட்டுமே அமைந்திருக்கும்.

இந்த ஆலோசனைகள் தேசிய ஆண்டுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அவற்றிற்கு செயற்பாட்டு வடிவம் கிடைக்கும். இது ஒரு கூட்டு நிறுவனத்தின் முக்கிய பண்பாக அமைகின்றது.

நோர்வேயில் எந்த ஒரு தமிழ் அமைப்பும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் போன்று இணைந்த கூட்டு நிறுவனமாக செயற்பட்டதாக யாம் அறியவில்லை.

ஒரு தேசிய ஆண்டுக் கூட்டத்தை தன்னகத்தே கொண்டு, அடித்தளத்தில் இயங்கும் வளாக அலகுகளைக் கொண்டு, அவற்றுக்கும் கீழான அடிமட்ட நிலையில் அங்கத்தினரைக் கொண்டு, இயங்கு நிலையில் உள்ள அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது, எட்டு மாவட்டங்களில் பதினேழு வளாகங்களாக வியாபித்து, வேறு எந்த ஒரு வெளிநாட்டுப் பின்புல அமைப்புகளாலும் முன்னெடுக்கப்படாத ஒரு சிறந்த கட்டமைப்பாகவும் முன்னுதாரணமாகவும் திகழ்கின்றது. இந்த இணைந்த செயற்பாடு தான் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் சிறப்பு அம்சமாகும்.

இவ்வாறு இணைந்து முடிவுகளை எடுக்கும் பண்பானது மிகவும் கனதியானது. இந்தப் பண்பு தான் எமது நிறுவனத்தின் கட்டுக்கோப்பாகவும் காப்பரணாகவும் திகழ்கின்றது.

பல நிறுவனங்கள் இன்று சுருங்கிச் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. இணைந்த முடிவுகளை ஏற்கும் தன்மையை ஏற்காததுதான் இவ்வாறான விளைவுகளுக்கான மூலகாரணியாக இருக்கலாம்.

கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக அன்னை பூபதி கலைக்கூடமானது தொடர்ந்து தனது பணிகளைத் திறம்பட முன்னெடுப்பதற்கு இந்த கூட்டுப் பணியில் எடுக்கும் முடிவுகள் சிறப்பாக இருந்ததே அடிப்படை காரணமாக இருக்க முடியும்.

தேசிய ஆண்டுக் கூட்டத்தில் ஒரு விடயம் தொடர்பாக சார்பு நிலை, சார்பற்ற நிலை என்பதைத் தாண்டி எமது இளைய தலைமுறையின் மொழி, கலை, பண்பாடு, வரலாறு என்பவற்றை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் மேம்பட்ட சிந்தனையோடு இயங்கும் இணைந்த செயற்பாடு மிகமிக அவசியம்.

அத்தோடு இணைந்து எடுக்கப்படும் முடிவு சரியாக நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். ஏனெனில் ஏற்கனவே எடுத்துவிட்ட முடிவை சரியாக நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படின் அது நிறுவனத்தின் நலனைப் பாதிக்கும். அது காலப்போக்கில் நிறுவனத்தை ஆட்டம் காணச் செய்யும். எனவே எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் சரியாக செயற்படும் வண்ணம் பணி புரியும் ஆசிரியர்கள் நிருவாகிகள் அங்கத்தவர்கள் அனைவரும் யாப்பு விதிகளுக்கு அமைய நடந்து கொள்வது அவசியம். இவ்வாறு கூட்டாக எடுக்கப்படும் முடிவுகளை மதித்து நடக்க வேண்டும். இதுவே ஒரு நிறுவனத்தின் மேம்பாட்டிற்கு உதவியாக அமையும்.

## 7. தலைமை நிருவாகத்துக்கு இருக்கும் பொறுப்பு

எடுக்கப்பட்ட முடிவுகள் யாவும் சரியான முறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அன்னை பூபதி தலைமை நிருவாகத்திற்கு உள்ளது.

தேசிய ஆண்டுக் கூட்டம் நடைபெற்ற பின்னர் அடுத்த தேசிய ஆண்டுக் கூட்டத்திற்கு இடையில் ஏற்படும் சவால்கள், வளாகங்களில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றை சீர் செய்யும் கடமை அன்னை பூபதி தலைமை நிருவாகத்திற்கு உண்டு.

இக்காலகட்டத்தில் நிறுவனத்தின் மேம்பாடு கருதி தேவையான முடிவுகளை அன்னை பூபதி தலைமை நிருவாகம் எடுக்கும்.

தலைமை நிருவாகம் யார் என்பதை தீர்மானிப்பது தேசிய ஆண்டுக் கூட்டமாகும். தலைமை நிருவாகம் தகுந்த முறையில் செயற்படவில்லை அல்லது பக்க சார்பாக செயற்படுகின்றது அல்லது அவர்களின் செயற்பாட்டில் நம்பிக்கையீனம் போன்றவை இருக்கும் பட்சத்தில் அவை தேசிய ஆண்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாப்பு விதிமுறைகள் மீறப்படும் போது அது தொடர்பாக பொருத்தமான அனைத்து வழிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு, தவிர்க்கமுடியாத இறுதிவழியாக விலக்கப்பட்டு நிருவாகத்தைக் கட்டிக் காத்துப் பாதுகாக்கவேண்டிய தலையாய பொறுப்பு தலைமை நிருவாகத்துக்கு உண்டு.

இந்தப் பொறுப்புகளை நேர்த்தியாகவும் உறுதியாகவும் தலைமை நிருவாகம் முன்னெடுத்து வருகிறது. தொடர்ந்தும் முன்னெடுக்கும். இதற்குத் தேவையான அனைத்துச் சட்ட நியாயாதிக்க அடிப்படைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இறுதியாக, நாம் அனைவரும் எமக்குரிய வகிபாகத்தைச் சரியாக விளங்கி அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மேலும் சிறப்பாக்க ஆக்கபூர்வமாகப் பங்களிக்கவேண்டும் என்பதையும், இந்தப் புரிதலின்றி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் சமூகவிரோதச் செயற்பாடுகளாகவும் தேசிய நிலைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளாகவும் மாறிவிடாது பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு தலைமை நிருவாகத்துக்கு மட்டுமல்ல அனைத்து அங்கத்தவர்களுக்கும் உரியது. என்பதையும் அனைவருக்கும் பொறுப்போடும் பணிவன்போடும் நினைவுபடுத்துகிறோம்.

**– தலைமை நிருவாகம் –**

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் – நோர்வே**